## *02.06.2017-2:-*ஆயுத வர்த்தகத்தை ஒழிப்பதற்கு திருத்தந்தை அழைப்பு



**ஜூன்,*02,2017.* “ஒளி, இருளை வெற்றிகொள்கின்றது என்பதை நினைவுபடுத்தும் விதமாக, நாம் ஒவ்வொருவரும், இன்றைய மோதல்களின் இருளில், சுடர்விடும் மெழுகுதிரியாக மாற முடியும்” என்ற சொற்கள், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் டுவிட்டரில், *02.06.2017*வெள்ளியன்று வெளியாயின.**

*மேலும், ஆயுத வர்த்தகத்தை ஊக்குவித்து அல்லது அதற்கு அனுமதியளித்துக்கொண்டு, அமைதி பற்றி பேசுவதும், அமைதியை நிலைநாட்ட உரையாடலில் ஈடுபடுவதும், முற்றிலும் முரண்பாடானது என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 02.06.2017 வெள்ளியன்று கூறியுள்ளார்.*

*உலகில் ஆயுத வர்த்தகம் முழுவதுமாக ஒழிக்கப்படுவதற்கு நாடுகளின் தலைவர்கள் தங்களை உறுதியுடன் அர்ப்பணிக்குமாறு, நாம் எல்லாரும் செபிக்குமாறு, இந்த ஜூன் மாதத்தில் கேட்டுக்கொண்டுள்ள திருத்தந்தை, இச்செபக் கருத்து பற்றிப் பேசியுள்ள காணொளியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.*

*எந்த ஒரு போரும், உண்மையிலேயே, பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் போரா அல்லது, சட்டத்திற்குப் புறம்பே ஆயுதங்களை விற்பனை செய்வதற்குரிய வர்த்தகப் போரா என்று கேள்வி எழுப்பியுள்ள திருத்தந்தை, இதனால், மரண வர்த்தகர்கள், செல்வந்தராவார்கள் எனக் கூறியுள்ளார்.*

*இந்நிலைக்கு நாம் ஒரு முடிவு கட்டுவோம் என்றும், ஏராளமான அப்பாவி பொது மக்களைப் பலியாக்கும் ஆயுத வர்த்தகம், முழுவதுமாக*

ஒழிக்கப்படுவதற்கு, நாடுகளின் தலைவர்கள் தங்களை உறுதியுடன் அர்ப்பணிக்குமாறு செபிப்போம் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

ஆதாரம் : வத்திக்கான் வானொலி